**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 மே 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகக் கட்டடத்தின் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டு கணக்குக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் கட்டடத்தின் பெறுமதி கணக்குகளில் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கணக்குக்கு கொண்டு வரப்பட வேண்டும். | குறித்த திணைக்களத்திற்கு கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 126 (III) (ஊ) | 58 எண்ணிக்கையான அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக வருமானப்பரிசோதகரால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | விளம்பரக் கட்டணங்களினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் - அத்தியாயம் x இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் (i) நிதிப்பிரமாணம் 371 | சபையினால் வெளிநபர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 314,897.00 தீர்வு செய்யப்படாமல் இருந்தது. | உரிய நிதிப்பிரமாணத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 571 | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய 39 எண்ணிக்கையான பிடிபணங்கள்,கேள்வி வைப்புக்கள் ரூபா 2,557,886.00 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதிப்பிரமாணத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிதிப்பிரமாணத்திற்க மைய மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | சபையின் 04 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த 04 வாகனங்களிற்குரிய எரிபொருட் பரீட்சிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விளம்பர நிலையங்களிடமிருந்தும் வங்கிகள் மற்றும் தரகு பெறப்படும் இடங்களிலிருந்தும் விற்பனை விபரங்கள் பெறப்பட்டு தரகு அறவிடப்பட வேண்டும். | வரி அறவிடுவதற்கு ஏதுவான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 91,347,285 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 88,557,121 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் * | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப்பட்ட வருமானம் * | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 674,390 | - | 4,789,809 | 7,818,398 | 596,560 | - | 555,195 | 5,388,509 |
| வாடகைகள் | 19,958,110 | - | 16,211,489 | 355,891 | 18,811,450 | - | 20,774,317 | 362,892 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,494,100 | - | 4,873,396 | 15,000 | 3,467,700 | - | 5,112,490 | - |
| ஏனைய வருமானம் | 115,379,590 | - | 136,701,293 | | 108,885,210 | - | 116,554,249 | - |
| | **140,506,190** | **-** | **162,575,987** | **8,189,289** | **131,760,920** | **-** | **142,996,251** | **5,751,401** |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும்.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 142,996,250 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 162,575,986 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டு உடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 19,579,736 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும் பட்டியலிடப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | இனிவரும் காலங்களில் வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபையானது தனது வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு கடந்த 05 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் வருமானத்தினை பட்டியற்படுத்தி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வீதவரி நிலுவை ரூபா 7,818,395 இனை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களின் வீதவரி நிலுவையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த வீதவரி நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் கடை வாடகை நிலுவை ரூபா 14,000 வினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகள் அறவிட நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் குத்தகை நிலுவை மற்றும் தண்டம் ரூபா 324,174 கடந்த 06 வருடங்களாக சபையினால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சந்தைக் குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவையினை அறவிட நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,106,873 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 199,013,058 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகாதார, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம்,30முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும 26 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான உபவிதிகள் உருவாக்கப்படல் வேண்டும். | உபவிதிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 26 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரித்து அதன்படி செயற்பாட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான பிரச்சினை காணப்படுவதுடன் அளவுக்கு அதிகமாக குப்பைகள் வாகனங்களினால் வீதி வழியே கொட்டி செல்லப்படுகின்றது. | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் மூடியவாகனம் பயன்படுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பிரதேச சபையினால் திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் 43 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | எதிர்காலத்தில் மருத்துவ பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) | திண்மக்கழிவுகள் சேகரித்தலின் போது தரம் பிரிக்கப்படாது ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவு சேகரித்தலின் போது தரம் பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | தரம் பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தடுப்பதற்கான ஏற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையானது வாகன ரயர்கள் மாற்றுவதற்கென வைப்புச்செய்யப்பட்ட ஆழ் நிதி நிலையான வைப்பு குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பயன்படுத்தப்படாது தொடர்ந்து வைப்பாக பேணப்பட்டு வருகின்றது. | ஆழ்நிதி வைப்புக்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | பதில் தரப்படவில்லை. |
| (ஆ) | 2016, 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த சனசமுக நிலைய மானியங்களில் ரூபா 260,000 தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சனசமூகநிலைய மானியங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மானியங்களில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புத்தூர் உப அலுவலகத்தின் ஆதனவரி இடாப்பு 1995 ஆம் ஆண்டில் அழிவடைந்துள்ளபோதும் நாளதுவரை இடாப்பு தயாரித்து ஆதனவரி அறவீடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி இடாப்பு தயாரிப்பதற்கான வேலைகளை துரிதப்படுத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதனவரி இடாப்பு தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஈ) | 2015 ஆண்டு ரூபா 1,348,298 பெறுமதியில் அமைக்கப்பட்ட கொல்களம் 05 வருடங்களாக பாவனைக்கு உட்படுத்தப்படாது காணப்படுகின்றபோதும் இக்கொல்களத்தினைச் செயற்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொல்களத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொல்களத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. |
| (உ) | பிரதேச சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | உரிய காலத்தில் பொது மக்களுக்கான சேவைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரிய காலத்தில் பொது மக்களுக்கான சேவைகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 21 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | வெற்றிடங்களுக்கான ஆட் சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் 2016 ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த இறைச்சிக்கடைக்கான குத்தகை ரூபா 300,000 குத்தகைதாரரிடமிருந்து 03 வருடங்களாக அறவிடப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக 757/18 ஆம் இலக்க வழக்கு 13 ஒக்ரோபர் 2016 ஆம் திகதியிலிருந்து நடைபெறுகின்ற போதும் இவ்விடயம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீதி மன்ற வழக்கிலுள்ள குத்தகை நிலுவை தொடர்பான விடயம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | அனுமதியற்ற எல்லைச்சுவர் அமைத்தமை தொடர்பாக MC/2937/S/15 ஆம் இலக்க வழக்கு 08 சனவரி 2016 திகதியில் தொடரப்பட்டிருந்த போதும் இவ்விடயம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீதி மன்ற வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையிலுள்ள இரண்டு சில்லு உழவு இயந்திரம் 02 வருடத்திற்கு மேலாக திருத்தப்படாது தொடர்ந்து பாவிக்க முடியாத நிலையில் உள்ளது. | குறித்த உழவியந்திரத்தினை இயந்திரப் பொறியியலாளரின் ஆலோசனை பெற்று விரைவாக பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் பயன்பாட்டிலிருந்துவரும் 06 வாகனங்களை சபைக்கு உரிமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் சபைக்கு உரிமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 05 வாகனங்கள் சபைக்கு உரிமையாக்குவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேவைகளுக்காக சபையினால் பெறுகை வழிகாட்டி 4.2 இல் குறிப்பிட்டதற்கு அமைவாக ஒவ்வொரு வருடத்திற்குமான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்பட வேண்டும். | சபையில் ஒவ்வொரு வருடத்திற்குமான பெறுகைத்திட்டம் இனி வரும் காலங்களில் தயாரிக்கப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் பாதீட்டின் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, மானியமும் உதவுதொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தமையானது வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் பாதீடு தயாரிக்கும் போது இவை கவனத்தில் கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் சபை நிதி மூலமாக மேற்கொள்வதற்கென திட்டமிடப்பட்ட ரூபா27,900,000பெறுமதியான 16 மூலதன வேலைகள் முற்றாக நிறைவேற்றப்படாமல் காணப்படுகின்றது. | வரவு செலவுத்திட்டத்தில் திட்டமிடப்பட்ட வேலைகள் நிறைவேற்றப்பட வேண்டும். | வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |